103

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,**
**அவர்கள் முன்பாக**

************

முறையீட்டு மனு எண். 0031 /2015

ஆணை எண். 010 /2016

நாள்: 14/ 03 /2016

திரு,ஆர்,இருதயராஜ்
479, முத்து மாரியம்மன் காலனி,
பள்ளப்பட்டி ரோடு, திருத்தங்கல்–626130 — முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
திருத்தங்கல் நகராட்சி. — எதிர் மனுதாரர்

திரு.ஆர். இருதயராஜ், நுகர்வோர் மக்கள் பாதுகாப்பு அமைப்பு, 479, முத்து மாரியம்மன் காலனி, பள்ளப்பட்டி ரோடு , திருத்தங்கல் என்பவரிடமிருந்து வரப்பெற்ற 28.04.2015 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் எண்.0031/2015 ஆக பதிவு செய்யப்பட்டது. இம்முறைமன்ற நடுவத்தால் இம் முறையீடு தொடர்பான ஆவணங்களை பரிசீலித்ததின் அடிப்படையிலும் உரிய விசாரணையின் அடிப்படையிலும் கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

**ஆணை**

திரு.ஆர். இருதயராஜ், திருத்தங்கல் என்பவரது முறையீட்டு மனுவின் கீழ் திருத்தங்கல் கிராமம், புல எண்:797, ஊரணி மயர்னம் என கிராமக்கணக்கில் வகைப்படுத்தப்பட்டுள்ளதெனவும், அதனை பிள்ளை இனத்தைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். புல எண்.797ல் உள்ள ஊரணிக்கு அருகிலுள்ள புல எண்கள்798/1A, 798/1B1 மற்றும் 798/1B 2 பகுதி இடத்தில் திருத்தங்கல் நகராட்சி புதிய பேருந்து நிலையம் அமைத்து வருவதாகவும், அப்பணியின்போது மேற்படி மயான ஊரணி நகாட்சி நிர்வாகத்தால் திட்டமிட்டு கல்குவாரி கற்பாறைகளால் மூடப்பட்டதெனவும் , இது குறித்து நடவடிக்கை எடுக்கவும், மேற்படி மயான ஊரணியை தூர்வார முறையிட்டும் நடவடிக்கை எடுக்காத அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரியிருந்தார்.

2. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக விருதுநகர் மாவட்ட ஆட்சியரது அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் கோரி பெறப்பட்டது. மாவட்ட ஆட்சியரது அறிக்கையுடன் இப்பொருள் குறித்து மாவட்ட ஆய்வுக் குழு அலுவலரது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தின் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

3. மாவட்ட ஆய்வுக் குழு அலுவலரது 18.05.2015 நாளிட்ட அறிக்கையினை பரிசீலித்ததில் இப்பொருள் குறித்த மனுதாரரின் 28.02.2015 நாளிட்ட புகார் குறித்து 19.03.2015 அன்று நேரில் விசாரணைசெய்யப்பட்டதென தெரிவிக்கப்பட்டுள்ளது. கிராம நிர்வாக அலுவலரது வசமுள்ள கிராம கணக்குகளின்படி புல எண்:797 சர்க்கார் புறம்போக்கு ஊரணி என தாக்கலாகி உள்ளதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், நகாரட்சி பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுவரும் இடத்திற்கு வடபுறம் ஊரணி புறம்போக்கின் சுமார் 10 செண்ட் அளவில் சுற்றிலும் உயரமாக சுற்றுச்சுவர் அமைத்து எரியூட்டும் மயானம் அமையப்பெற்றுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தல விசாரணையின்போது மனுதாரர் இல்லாததால் மீண்டும் 19.05.2015 அன்று நேரடி ஆய்வு மேற்படி அலுவலரால் மேற்கொள்ளப்பட்டதென்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட இடத்தினை நேரில் ஆய்வு செய்ததில் நகாரட்சி நிர்வாகத்தினருக்கு நன்கொடை வழங்கப்பட்ட இடத்தில் மட்டுமே பேருந்து நிலையம் அமைக்கும் பணி நடைபெறுவதாகவும் மனுதாரர் தெரிவித்ததுபோல் ஊரணி புறம்புகளில் பேருந்து நிலையம் அமைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புகார் மனுதாரர் தெரிவித்துள்ளது போல் இந்த ஊரணியை மயானமாக பயன்படுத்தி வந்தாலும் கிராம புலப்படத்தில் மயானம் என்பதற்கான குறிகளோ, கிராமக் கணக்குகளில் மயானம் என்பதற்கான பதிவுகளோ இல்லை எனவும் ஊரணியின் ஒரு பகுதியில் மண் கொட்டி மேடாக்கப்பட்டுள்ள இடத்தை ஆழப்படுத்தி ஊரணியாக பயன்படுத்த நகராட்சி நிர்வாகத்தை கேட்டுக் கொள்ளலாமெனவும் கருத்துரைக்கப்பட்டுள்ளது. கிராம நிர்வாக அலுவலரது 19.05.2015 நாளிட்ட சான்றும் மேற்படி புல எண்.797 பரப்பு 0.39.5ஹெக்டர் என்பது சர்க்கார் புறம்போக்கு – ஊரணி – என கிராமக் கணக்கில் தாக்கல் ஆகியுள்ளது எனவும் புல வரைபடத்திலும் மயானம் என குறியீடு ஏதும் குறிப்பிடப்படவில்லை என்பதையே பிரதிபலிக்கிறது.

4 திருத்தங்கல் நகாட்சி ஆணையரது 17.06.2015 நாளிட்ட அறிக்கையில் பேருந்து நிலையம் அமைக்க இடம் போதிய அளவில் இல்லாததால் நகராட்சிக்கு சொந்தமான நிலத்திற்கும் கூடுதலாக திரு.ஜி.முனியசாமி நகராட்சிக்கு தானமாக வழங்கிய 16 செண்ட் நிலம் (சர்வே எண்.798/1பி2ஏ) பத்திர பதிவு எண்.2643/2012, நாள்:20.04.2012, 2644/2012 மற்றும் சர்வே எண்:798/1பி2ஏ பத்திரப் பதிவு எண்:2644/2012 உள்ள மற்றொரு 51 செண்ட் நிலத்தை அதே திரு.முனியசாமி என்பவரால் திருத்தங்கல் நகாட்சிக்கு நன்கொடையாக கொடுக்கப்பட்ட மொத்த நிலங்களின் அளவுக்குள்ளேயே முறையாக நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. பேருந்து நிலைய கட்டுமான பணியின் போது விதிமுறைகளுக்கு மாறாக சர்வே எண்.797–ல் உள்ள அரசு புறம்போக்கு நீர்பிடிப்பு பகுதியில் நகாட்சி மூலம் எந்தவொரு அபிவிருத்தி பணியும் நடைபெறவில்லையெனவும் புகாரில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுக்கு எந்தவித முகாந்திரமும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. மனுதாரரிடம் 31.08.2015 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களால் முறைமன்ற நடுவத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அவ்வமயம் மனுதாரர் தனது எழுத்துபூர்வமான வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் தான் அனுப்பிய கடித முகப்பு அட்டையில் (Letter pad) நுகர்வோர் மக்கள் பாதுகாப்பு அமைப்பு – தொழிற்சங்க பிரிவு மற்றும் ஏஞ்சல் ஹோம் (Angel home) ஆகியவை சம்பந்தப்பட்ட துறைகளில் பதிவு செய்யப்படவில்லை எனவும் நுகர்வோர் மக்கள் பாதுகாப்பு அமைப்பு தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டப்படியாக, விருதுநகர் மாவட்ட பதிவுத் துறையில் பதிவு செய்துள்ளதாகவும் பதிவுச்சான்றினை விரைவில் அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், இனிவரும் காலங்களில் சம்பந்தப்பட்ட துறைகளில் அனுமதி பெற்று முழுமையான முகப்பு அட்டை(Letter pad) பயன்படுத்துவதாகவும் உறுதி அளித்துள்ளார். இருப்பினும் இதுகாறும் பதிவுச்சான்றின் நகல் வரப்பெறவில்லை. மேற்படி விசாரணையின்போது மனுதாரர் உரிய விசாரணை செய்து மூடப்பட்ட ஊரணியை தூர்வாரி அதற்கு சுற்றுச்சுவர் அமைத்து மேற்குறிப்பிட்ட சமுதாயத்தவர் இறுதி சடங்குகளுக்காக பயன்படுத்த ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டார். புகாரிலுள்ள பொருள் குறித்து ஆதாரங்களோ மேற்படி உள்ளாட்சியில் நடைபெற்ற முறைகேடுகள் என்பது குறித்து எவ்வித முகாந்திரமோ ஆதாரமோ சமர்ப்பிக்கப்படவில்லை.

105

6. இருப்பினும், இப்பொருள் தொடர்பாக திருத்தங்கல் நகராட்சி ஆணையரிடம் 15.09.2015 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பேருந்து நிலைய பணி முடிவடையும் நிலையில் உள்ளதாகவும் , புகாரில் குறிப்பிட்ட இடத்தில் நகராட்சியின் மூலமாக எவ்வித பணியும் செய்து மேடாக்கப்படவில்லையெனவும் நகராட்சி மன்றத்தில் எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கப்படவில்லை எனவும் நிதி முறைகேடு குறித்தான புகார் எதுவும் பெறப்படவில்லையெனவும் மேற்படி விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஊரணியில் நகராட்சி மூலமாக மண் ஏதும் நிரப்பப்படவில்லை எனவும் உறுதி பட தெரிவிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட இடம் குறித்தான புகைப்பட நகல்களையும் முறைமன்ற நடுவத்தின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

7 இப்பொருள் குறித்து ஏற்கனவே மனுதாரர் 28.04.2015 நாளிட்ட மனுவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கு முறையீடு செய்துள்ளது தெரிய வந்தது. எனவே , அம்மனுவின் நகலினை அனுப்பி வைத்திடுமாறு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டார். (க.எண்.31/2015–16 நாள்.29.09.2015). இதனையடுத்து மனுதாரர் தனது 06.10.2015 நாளிட்ட கடிதத்துடன் மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுவின் நகல் மற்றும் அதன்மீதான ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் 09.04.2015 நாளிட்ட தீர்வுக் கடித நகலினையும் அனுப்பி வைத்துள்ளார்.

8, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கு ஏற்கனவே அனுப்பப்பட்ட மனுதாரரது மேற்படி முறையீட்டு மனுவில் பேருந்து நிலைய ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஒப்புதல் ஆணை வழங்கப்பட்டது குறித்தும் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள மனுவிலுள்ள பொருள் குறித்தும் முறையீடு செய்யப்பட்டுள்ளது. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரக 09.04.2015 நாளிட்ட கடிதத்தில், உண்மை நிலவரப்படி மனுதாரரது மனு ஊழல் தடுப்பு சட்டம், 1988ன் கீழ் எந்தவொரு குறிப்பானகுற்றத்தினையும் வெளிப்படுத்தவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் மேற்படி கடிதம் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு முகவரியிடப்பட்டு நகல் மனுதாரருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

9. மேற்கண்டவாறு மனுதாரரின் முறையீடு குறித்து ஆவணங்கள் மற்றும் விசாரணைகளின் அடிப்படையில் இம்முறைமன்ற நடுவத்தால் கூர்ந்தாய்வு செய்து பரிசீலிக்கப்பட்டது. புகார் குறித்து குறிப்பான முகாந்திரமோ ஆதாரமோ நிரூபிக்கப்படாத நிலையிலும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரால் பரிசிலிக்கப்பட்டு பதில் அளிக்கப்பட்ட நிலையிலும், உரிய தொடர் நடவடிக்கைகளுக்காக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரால் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு முகவரியிடப்பட்டு மனுதாருக்கும் நகலிடப்பட்டுள்ள நிலையில் இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்ற மனுதாரரின் முறையீட்டு மனுமீது இம்முறைமன்றத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேல் நடவடிக்கை ஏதுமின்றி இறுதியாக்கப்படுகிறதென ஆணையிடப்படுகிறது.

2016 ம் வருடம் மார்ச் மாதம் 14 ஆம் நாளன்று கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் வெளியிடப்படுகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலருக்காக

பெறுநர்.
திரு.[illegible]
479,முத்துமாரியம்மன் காலனி,
பள்ளப்பட்டி ரோடு, திருத்தங்கல்–626130

நகல்
1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை.
2. ஆணையாளர், திருத்தங்கல் நகராட்சி. தக்க தொடர் நடவடிக்கைக்காக